வித்தியா பூஷணி.

அறிவைத் தீட்டி ஆனந்தம் ஊட்டும் அரியமாதத் தமிழ்ப் பத்திரிகை.

மலர் 1.] செப்டம்பர்—1913. [இதழ் 1.

வித்தியா பூஷணி.

உலகத்துள்ள தேயங்கள் எல்லாவற்றினும் இந்தியாவானது, செல்வத்தினும் கல்வியினும் தீரத்தினும் வீரத்தினும் உயர்ந்தது என்பதைப் பண்டைக்காலதது ஆசிரியர்கள் எழுதிய சாஸ்திரங்களே நமக்குச் சான்று பகரும். இக்காலத்தோ, யாவரானும் புகழப்பெற்ற இவ் விந்திய நாடு மிகமிகத் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றது. இங்ஙனம் இருப்பதற்குக் காரணம் என்னையோ எனின், அவ்வவ் விடங்களில் உள்ளார் அவ்வவ்விடத்து வழங்கும் தத்தமது தாய்ப்பாஷைகளைப் போற்றாது அயனாட்டுப் பாஷைகளிற் பயின்று, அவற்றினை மேன்மைப்படுத்துவதேயாம். நாம் இப்போது எத்தேசத்துப் பாஷையின் மிகப் பற்றுதல் வைத்திருக்கின்றோமோ, அப்பாஷைக்குரியார் தங்கள் பாஷையில் எவ்வளவு பற்றுவைத்திருக்கிறார்கள் என்பதைச் சற்று விசாரிப்பாம். நமக்குப் படைப்புக்காலந் தொட்டு, அனாதிமுதனூலாக வந்த ருக், யஜுர், ஸாம, அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும், சங்கரர், இராமாநுஜர், நீலகண்டர் முதலிய பரமாசாரியர்கள் இயற்றி அருளிய பாடியம் முதலானவற்றையும் தங்கள் பாஷையின் மொழிபெயர்த்தும், நம்தேசத்துச் சிற்பி முதலானோர் செய்துள்ள அரிய வேலைப்பாடு உள்ள பொருள்களைத் தங்கள் ஊரிற் கொண்டுபோய், அவற்றின் விபரத்தைத் தங்கள் பாஷையில் எழுதித் தங்கள் சாதியாருக்குப்பயன்படுமாறு செய்தும்வருகின்றனர். அவர்கள் தங்களுடையபாஷை எங்கும்பரவவேண்டும் என்ற ஊக்

கத்தோடு செய்யும் தொழில்கள் இவ்வளவோ? பொருளைப்பொருளென்று கருதாமல் கோடிக் கணக்காகச் செலவிடுகின்றனர்; தங்கள் உயிரையும் தரச் சித்தமாக இருந்து உழைக்கின்றனர். அத்தகையோரே நமதரியபாஷை நூற்களைத் தங்கள் பாஷையில் மொழிபெயர்த்துக்கொள்ளுகின்றனரென்றால், நமது பாஷையின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? நாமோ நமது பாஷையை அற மறந்து, அன்னோர் பாடையிற்றேறிப் பெரிய பட்டங்கள் பெற்று உயர்தர நிலைமைக்கு வரவேண்டும் என்னும் துரபிப்பிராயம்கொண்டு, நம் பாஷையை மிகத் தாழ்ந்த நிலைமையிற்கொண்டு சேர்க்கின்றோம்.

நம் பாஷையைத் தாழ்ந்த நிலைமைக்குக்கொண்டு வந்ததனாலேயோ இச் செல்வ இந்தியநாடு மிகத் தாழ்ந்த நிலைமையில் வந்துவிட்டது என்று சிலர் சந்தேகிக்கலாம். நம்பாஷையில் ஒவ்வொருவரும் தேர்ச்சிஅடைந்திருப்பராயின், ஒருவருக்கொருவர் நட்புப் பாராட்டுகின்றனர். அந்நட்புப் பாராட்டுவதனானே ஒற்றுமை உண்டாகின்றது. ஒற்றுமையானே தேயம் உயர்ந்த நிலைமைக்கு வருகின்றது இதனானே, தேயம் உயர்ந்த நிலைமையில் இருப்பதற்கு ஒற்றுமை ஆவசியகம் வேண்டியது என்பதும், அவ்வொற்றுமைக்குக் காரணம் நட்புப் பாராட்டல் என்பதும், அந்நட்புக்குக் காரணம் தத்தம் தாய்ப் பாஷைகளில் தாம் தாம் தேர்ச்சியடைதல் என்பதும் பெறப்பட்டது. ஆதலின், தேயம் உயர்நிலையடையவேண்டின் நமது தாய்ப்பாஷையை நாம் பொன்னேபோற் போற்றவேண்டியது. தாய்ப்பாஷையினைப் போற்றாது, அன்னிய பாஷையில் தேர்ச்சி உறுவதனால் என்னையோ தீங்கெனின், கூறுதும். தாய்ப்பாஷையைப்போற்றாது அன்னிய பாஷையில் தேர்ச்சியுடையார், தங்களைத் தாங்களே தேயத்தைஆளும் சக்கரவர்த்திகள் என்று எண்ணித் தாய்ப் பாஷையிற் பயின்று தேர்ந்த நம்மவரை ஓர் பொருட்டாக எண்ணாது அவமதிக்கின்றனர். அங்ஙனம் அவமதிப்பதானே நட்பின்மை உண்டாகின்றது. நட்பின்மை வேற்றுமையை உண்டுபண்ணுகின்றது. வேற்றுமை உண்டாவதால், தேயம் தாழ்ந்த நிலைமையை அடைகின்றது. இதனால், நமதுபாஷையைக் கைவிடாது அதனைப்பெரிதும் போற்றவேண்டியது நமது கடமை என்பது பெறப்பட்டது.

இனி, இவ்விந்தியாவின்கண், பல பாஷைகள் பேசப்பட்டு வருகின்றன என்பதை யாவரும் அறிவர். அவை, வடமொழி, தென்மொழி, இந்தி. குஜராத்தி, தெலுங்கு, மலையாளம், துலுக்கு முதலினவாம். அவற்றுள், நம்மவர் சிறப்பாகக்கொண்டது வட மொழி, தென்மொழி என்னும் இரண்டனையுமேயாம். இவையே தேவபாஷையென்று சொல்லப்படும். கடவுளே இவை யிரண்டினை யும் வெளிப்படுத்தினர் என்பது நம்பெரியோரது கொள்கை. இதனை "தம்மலரடியொன் றடியவர்பரவத் தமிழ்ச்சொலும் வட சொலுந் தாணிழற்சேர - வம்மலர்க்கொன்றை யணிந்தவெம் மடி களச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே" என்னும் தமிழ்வேதத்தா னறிக. இனித் தமிழ்மொழி வடமொழியினும் சிறந்ததென்பதே நம்மனோர் கொள்கை. அது அப்பாஷையின் பெயரைச் சொல்லு மாத்திரத்தானே புலனும். தமிழ் என்பதற்கு இனிமை என் பது பொருள். எனவே படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிமை யான பாஷை என்பது பெறப்பட்டது. இதுபற்றியே, முழுமுதற் கடவுளாகிய பரமசிவமும் தமிழன் எனும் பெயர்கொண்டுளான் போலும். இத்துணை அருமைபெருமை வாய்ந்த தமிழ்ப் பாஷை யானது முற்காலத்துச் சேர சோழ பாண்டியர்களால் ஆதரிக்கப் பட்டு வந்ததனுல், நம்மவர் யாவரும் அக்காலத்து அப்பாஷை யின் மிகப் பாண்டித்தியம் உடையவராக இருந்தனர். இக்காலத் தோ, நம்மை ஆள்பவர் அயனுட்டினராக இருப்பதாலும், நம்மவ ருட் சிலரே கோடரிக் காம்பாகத் தோன்றினதாலும், நந் தமிழ்ப் பாஷையானது ஆதரிப்பாரின்றியும் படிப்பாரின்றியும் கேட்பா ரின்றியும் போயிற்று. பிரிடிஷ் துரைத்தனமே இல்லாது வேறு துரைத்தனம் இந்நாட்டிற்பொருந்துமேல், இந்தக்கோடரிக்காம்பு கள் இப்போது தலைகாட்டும் தமிழின் தலையைக்கூட அற வெட்டி விடுவர். நமது காருணிய பிரிடிஷ் துரைத்தனத்தாராவது நம் பாஷையை முன்னுக்குக்கொண்டுவருவதிற் சிறிது ஊக்கம்காட்டி வருகின்றனர்.

இங்ஙனம், தாழ்ந்தநிலையில் இருக்கும்நம்தாய்த்தமிழ்ப்பாஷை, எங்ஙனம் முன் இருந்த நிலைமைக்கு வரும் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவம். நம்மவர் யாவரும் ஒன்றுசேர்ந்து அயனுட்டுப் பாஷையில் எவ்வளவு ஊக்கம் வைத்திருக்கிறேமோ, அதைவிடப்

பதின்மடங்கு ஊக்கம் நந் தமிழ்ப்பாஷையிற் காட்டவேண்டும். அவ்வாறு காட்டுதற் கறிகுறியாக நம்பாஷையில் வெளிவரும் பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டும். அயனாட்டினர் தந்தேயத்திற் கிளம்பும் பத்திரிகைகள்மீது எவ்வளவு பற்றுதல் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அனேகமாக அறிந்திருக்கிறோம். அத்தேசத்து ஓர் ஏழையேனும் பத்திரிகை படியாது இருக்கமாட்டான். அதுபோல, நாமும் நமது தமிழ்ப் பத்திரிகைகளை ஆதரிப்போமானால் நாமும் அவர்களைப்போல உயர்தர நிலைமைக்கு வருவோம். நாம் உயர்நிலை அடைவதற்குப் பத்திரிகைகளே பெரும் சாதனமாக உள்ளன. ஆதலின் பத்திரிகைகளை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும் என்பது ஆவசியகம். அதனாலேயே நமது பாஷை செழிக்கும்.

நம் தமிழ்நாட்டிலோ, பல பத்திரிகைகள் வெளிவந்துள்ளன் எனினும், தமிழ்ப்பாஷை விஷயமாகச் சிறப்பாக எழுதும் பத்திரிகைகள் ஒரு சிலவே உள்ளன. அவற்றைப்போலப் பல பத்திரிகைகள் வெளிவரவேண்டும் என்ற எண்ணத்துடன் இவ் "வித்தியா பூஷணி" என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது.

இது தமிழ் மக்கள் சுகக்ஷேம ஐஸ்வர்ய ஆயுராரோக்கிய சம்பன்னராக வேண்டிப் பல கற்றுவல்ல பண்டிதோத்தம சிகாமணிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களை அகத்திற்கொண்டு ஒவ்வொருமாத முதற்றேதியில் வெளிவரும். இதனகத்துக் கல்வி, ஒழுக்கம், மந்திரம், யோகம், மனோவசியம், தூர சிரவணம் முதலிய பல அரிய இரகசியமான விஷயங்களும் படிப்பதற்கினிய தமிழ் நாவல்களும், நாடகங்களும் முறையே எழுதப்படும். இது தன் பெயருக்கேற்ப வித்தையைப் பூஷணமாக அணிந்து வெளிவருமாதலின், இதனைத் தமிழ்மக்கள் யாவரும் கண்டு ஆனந்திப்பதே அன்றி, ஆதரிக்குமாறும் எல்லாம்வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சி நின்றேம்.

---

2. பெண்களுக்கும் கல்வி அவசியம்.

கல்வியானது விசேஷமாகப்பரவுகின்ற அதி நாகரீகமுள்ள நாடுகளிலும், சகல துர்க்கிருத்தியங்களும், ஆண் பெண்களால் செய்யப்படுகின்றனவே; அப்படியிருக்க, கல்வியினால் என்ன பிரயோசனமென்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். இதற்குச் சமாதானமாகச் சில உபமானங்களை யெடுத்துக்காட்டினாற் போதுமென்று நினைக்கிறேன். ஒரு மருந்தை வியாதியால் வருந்துகிற பத்துப் பெயருக்குக் கொடுத்தால் பலர் பிழைக்கிறார்கள்; சிலர் இறந்து போகின்றனர். இதனால், மருந்தில் பயனில்லையென்று சொல்லி மருந்தைக் கொடாமலிருக்கலாமோ? உலகத்திலிருக்கும் ஒவ்வொருவியாதிக்கும் அனேகமருந்துகள் செய்யப்பட்டு வழங்கி வருகின்றன. ஆயினும், அவ்வியாதிகளா லிறப்போர்களை எண்ணி முடியாது. இதனால் மருந்திற்பயனில்லையென்றும், வைத்தியசாஸ்திரம் பொய்யென்றும் சொல்லலாமா? அழுக்கும் துர்க்கந்தமும் நிறைந்தவிடங்களில் விசேஷமாக வாந்திபேதி உண்டாகிறதென்று வைத்தியர் சொல்லுகின்றனர். ஆயினும், சுத்தமானவிடங்களில் அதுஉண்டாகிறதைம், அசுத்தமான சிலவிடங்களிலது உண்டாகாமலிருப்பதையுங்கண்டு, 'வாந்திபேதி அசுத்தத்தினால் உண்டாகிறதில்லை. நம்மைச் சுற்றிலுமிருக்கிற அசுத்தத்தை நாம் நீக்கவேண்டியதில்லை. நாம் வாந்திபேதி வந்தால் பார்த்துக்கொள்ளலா' மென்று சொல்லும் பைத்தியக்காரரும் உலகத்திலுண்டோ? ஆயினுங் கல்வியால் பெண்களுக்குப் பயனில்லை; அவர்களுடைய அறியாமையை நீக்கவேண்டிய அவசியமில்லையென்னும் புத்திமான்களனேகரைக் கணக்கிடலாமல்லவா? இவர்கள் சற்றுயோசித்தால் தமது அபிப்பிராயம் தப்பென் றெளிதிலறிந்து கொள்ளலாமே! நமது பாவங்களுக்குக் காரணமின்னதென்று நிச்சயமாக அறியாவிட்டாலும், நமது அஞ்ஞானமே பெரும்பாலும் நமது பாவத்திக்கு ஏதுவாயிருப்பதை ஒருவாறு காண்கிறோமல்லவா? நமது அஞ்ஞானமாகிய இருளை நீக்கி, அதனால் விளையுந்துக்கத்தினின்று மொருவாறு விலகமுயலாமல், நாம் முன்னும் பின்னும் செம்மையாக அறியோம்; செத்தாலும் சரியே, பிழைத்தாலுஞ் சரியே, இருந்த விடத்தைவிட்டசையக்கூடா தென்று வீணெண்ண மிட்டுக்

கொண்டிருக்கலாமோ? நமது கருமமாகிய பிணிக்கு ஒருமருந்தைத் தேடாமல் வீணிலேமடியலாமோ? நமது கருமப்பிணியைப் போக்குவதற்குக் கல்வியும், கல்வியாலுண்டாகும் ஞானசஞ்சீவியையும் விட வேறு மருந்தை நாமறியோம். இது தவறாத மருந்தென்று சொல்லத் துணியமாட்டோம். ஆயினும் நமக்குத் தெரிந்தபின் இவ்வொருமருந்தையு முண்ணாமலிருப்ப தொண்ணுமோ? மேலும் இம்மருந்தைப் பூரணமாகச்சாதித்தாலன்றி, அதன்முழுப் பயனை அறியலாகாது ஆதலால், நமது உயிருள்ளவரையிலும் இம்மருந்தை நாம் சாதிக்கவேண்டாமோ? நம்மி லொருபகுதியாயும், நமது வாழ்க்கைத் துணை நலமாகவும் படைக்கப்பட்டிருக்கும் பெண்களுடையகருமங்களையும், அஞ்ஞானத்தையும் நமதுபோலவேபாவித்து, அவைகளை நீக்க முயலவேண்டாமோ? இந்தநற்றொழிலில் அவர்களுடைய சுகத்துக்காகச் செய்யாவிடினும், நமது காப்புக்காயினும் அவசியம் செய்யவேண்டியதா யிருக்கிறது. எனது அண்டை வீட்டுக்காரனுடைய வீடுதீப்பற்றியெரிகையில் அவனுக்குச் சகாயஞ்செய்யாவிட்டாலும், என்வீட்டைக்காத்துக் கொள்ளும் பொருட்டாவது அத்தீயை அவிக்கநான் முயல்வேனன்றோ?

கல்வியறிவில்லாப் பெண்கள் தங்கள் புல்லறிவால் அனேக தீய காரியங்களைச் செய்கின்றனர். அம்மட்டோ அவர்கள் செய்வது! அவர்கள் கெடுவதுமன்றி நமது புத்தியையும் மயக்கி அசத்தியத்துக்கும் அநியாயத்துக்கு முட் படுத்துகின்றனர். அதனை யொருதிருஷ்டாந்தத்தால் காட்டுவோம். ஒருவன் சென்னைக் கல்விச்சங்கத்தில் வித்தியாப்பியாசஞ்செய்து யோக்கியதா பத்திரம் பெற்று நாலைந்துவருஷம் படிப் படியே உத்தியோகத்தி லுயர்ந்து இப்பொது தாசீல் வேலைசெய்வதாகப் பாவித்துக் கொள்வோம்; அவன் தனது கல்வியை வீணிலே போகவிடாமல்,

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்று நாயனார்சொல்லியபடி, யோக்கியாயோக்கியத்தையும்; சத்தியாசத்தியத்தையுமறிந்து, யோக்கியத்தோடும் சத்தியத்தோ

டும் கடந்து, இலஞ்சம் வாங்குதல் முதலிய அநுசிதகாரியங்களைச்
செய்யாமலிருக்க முயன்று வருகின்றான்; உள்ளமட்டில் திருப்தி
யடைந்து அவனிருந்தபோதிலும், அவன் மணஞ்செய்துகொண்ட
சீமாட்டிக்கோ சற்றுந்திருப்தியில்லை. “இதோ பாரும் அண்டை
வீட்டு இரங்கன்நேற்றையமொட்டைப்பையன்; அவன் உத்தியோ
கஞ்செய்து மெத்தை வீடுகள், தோட்டந்துறவுகள் அமைத்தது
மன்றி, மாதமாதம் ஆயிரமாயிரமாய்க் குவித்துக்கொண் டிருக்
கிறான். நீர் என்ன சம்பாதித்தீர்! குடியிருக்க நல்லவீடுண்டா!
கட்டுவதற்கு நல்ல சேலையுண்டா! போடுவதற்கு நல்ல உடைமை
யுண்டா! இத்தனைநாள் பெரிய உத்தியோகஞ்செய்தீரே! ஒரு நூறு
வராகன் உடைமை போட்டதுண்டா! கைக்கும் வாய்க்குஞ் சரி
யாய்ப் போய்விடுகிறதே! நாளைக்குச் செத்தா லென்னை யார் காப்
பாற்றுவார்! பிள்ளைகள் எப்படி அலையும்! இவ்வளவு பிரயாசைப்
பட்டு வித்தை கற்றீரே,‘காளிதோட்டத்துக் கற்பகம்போல்,’ என்
றபடியே என்ன பிரயோசனம் நீரேபாரும்” என்று இவ்வாறு
இச்சீமாட்டி பிரதிதினமும் அவன்செவியிலும் முகத்திலும் இடி
யைப்போலிடித்துவருகிறாள்; அவனுக்கோ மனவருத்தமுண்டாகி
யோக்கியதையை விடவும் மனதில்லை; அவளை நீக்கியிருக்கவுங்கூட
வில்லை; அவள் வார்த்தைக்குப் பதில்சொல்லவுங்கூடவில்லை. இவ்
வாறு இருதலைக் கொள்ளியி லகப்பட்ட எறும்புபோல் அலைந்து
வர, அவள் உபதேசம் நாளாவட்டத்தில் தலைக்கேறுகின்றது.
பெண்களுடைய துரபிமானமும், பிடிவாதமும் மகாகொடிய
தென்றும், பெண்வார்த்தையைத் தடுப்பது அசாத்தியமென்றும்
எத்தேசத்தாருஞ் சம்மதிக்கின்றனர். பெண்வார்த்தையைத்தடுக்க
மாட்டாமலல்லவோ, தசரதன் இராமனை வனவாசஞ்செய்யவிட்டுப்
பிராணனைவிட்டது! அப்பெண்வார்த்தைக் கிசைந்தல்லவோ இரா
மன் இராவணயுத்தத்தில் படாதபாடுபட்டதும் சீதையால் அபகீர்
த்தியடைந்ததும்? இவ்விதச் சரித்திரம் கிறிஸ்தவருக்கு முண்டு.
ஈவ்என்பவள் இச்சையைத் தடுக்கமாட்டாமல் ஆதம் சீவ தருவின்
பழத்தைப் பறித்துத் தன்னையும் தன்சந்ததி யனைத்தையும் பாவத்
துக்கும் மரணத்துக்குமுட்படுத்தினானென்று யூதவேதங்கூறுகின்
றது. அம்மகான்களெல்லாந் தோற்றுப்போயிருக்கையில் இவன்
ஜயிக்கவல்லவனோ? மேற்கூறிய விசித்திரம் கற்பனை யென்றுபலர்
கருதினும், நம்மைச் சுற்றிலு முள்ளவர் பீடிப்பதினால் நமதுநேர்

மையினின்றுஞ் சத்தியத்தினின்று மிழிந்துபோகக்கூடுமென்பதை யனுபவத்தாற் கண்டுகொள்ளலாம்.

இச்சரிதை சிலவிடத்து உண்மையாக நடக்குமாயினும், இது ஒரு பெருங்குறையென்று சொல்லலாமோ? ஆழ்கடலுக் கணுப்போலென்று சிலர் நினைக்கலாம். ஆயினும் அணுவே அண்டமாகுமாதலால், அணுவை இகழ்ந்து பராமுகமா யிருக்கலாகாது. ஆலின்வித்து அணுவாயினும் மரம் பெரிதல்லவோ? சற்று ஆழமாக யோசித்தால் அணுவைத்தான் விசேஷ கவனத்தோடு காத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், பெரியவைகள் தாமாய் நமது கவனத்தில் படியும்; சிறியவைகளோ நாம் எச்சரிக்கையாயிருந்தாலொழிய, பார்ப்பது அசாத்தியம். ஒருநிமிஷத்தில் உயிரைக் கொண்டுபோகும் வாந்திபேதிக்கு உடனே மருந்துதேடுவார்களாயினும், பலவருஷம் அணுவணுவாய் நமது பலத்தைக்குறைக்கும் க்ஷயத்தால் துர்ப்பலமடையும் வரையில் அதை அனேகர்பொருட்படுத்துவ தில்லை. ஆதலால், நமது குறை சிறியதென்று அலக்ஷியமுஞ் செய்யலாகாது. பெண்களிடத்து நமக்கிருக்கும் நேசமும் பாசமும் சிறிதல்ல. அவர்கள் தங்கள் இஷ்டப்படி நம்மை ஆட்டவல்லவர். ஆதலால், அவர்களைச் சீர்திருத்தாததினால் உண்டாகுங் கொடுமை கொஞ்சமல்ல. நமது சன்மார்க்க நெறி ஒருவிடத்தில் பங்கப்பட்டால், முற்றுமழிந்துபோம். துன்மார்க்கமானது ஓரிடத்திருந்தாலும் வைக்கோல்போரிற்பட்ட தீயைப்போல் நாடெங்கும்பரவும். ஆதலால் பெண்களுக்குக் கூடியவளவு அறிவுண்டாகச் செய்வதும் அவர்கள் மனவிருளை யகற்றுவதும் நமது கடமையேயாம்.

நாகை. சிவானந்த சுவாமிகள்.

---

3. நன்றிமறத்தல் நன்றன்று.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது."

நம்மால் எவ்வகையினும் தகுந்த மாறுதவி செய்ய முடியாத பேருதவியை நமக்குச் செய்கின்றவர்கள் பலருண்டு. அவர்களில்

கடவுள், தாய் தந்தையர், ஆசிரியன், அரசன் ஆகிய இவர்கள் முதன்மையானவர்களாம். இப்பூமியில் நாம் பிறந்து வளர்ந்து வாழ்வதெல்லாம் கருணைக்கடலான கடவுளின்செயலே யல்லவா? இவ்வுலகத்திலுள்ள அநந்தகோடி ஜீவன்களும் ஆதியில் சிறிதும் அறிவின்றிக் கல் மண் முதலான அசித்துக்களோடொப்பாகக் கிடப்பது கண்டு கடவுள் அவைகளிடத்தில் கருணைகூர்ந்து, எவ்வகையிலாயினும் அவை கடைத்தேறும் உபாயத்தைக் கண்டறிந்து பேரின்பவீடு பெறட்டுமென்று கடாக்ஷித்தருளி, ஞானோற்பத்திக்குக் காரணமாகிய இந்திரியங்களும், நற்செயல்கள் பலவும் செய்வதற்குத் துணைக்கருவிகளாகிய கைகால் முதலிய உறுப்புகளும் அமைந்த அற்புத சிருஷ்டியாகிய சரீரத்துடனே இப்பூமியில் பிறக்கும்படி சங்கற்பித்து, இப்பூமியில் நமது நல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் பலவற்றையும் படைத்துப்பரிபாலித்து வருகின்றார். நமக்கு நன்மைசெய்வதில் கடவுளுக்குப் பிந்தியவர் தாய் தந்தையர்கள். தாயானவள் குழந்தையைப் பத்துமாதம் கருப்பத்தில் சுமந்துபெற்று, பசிவேளையறிந்து பாலூட்டித் தூங்குகிறவேளை தாலாட்டி, அழுகிறவேளையறிந்துநகைமூட்டி, விளையாடுகிறவேளையில் சீராட்டிக்குளிப்பாட்டுகிறவேளையில் குளிப்பாட்டி, ஈ எறும்பு கூட மேலேமொய்க்காமலும் கவனமாக இருந்து, கண்ணை யிமை காப்பதுபோலப் பிறந்தநிமிஷம்முதல் காப்பாற்றுகிறாள்; சிறிதும் நோய் அணுகவொட்டாமல் சமயமறிந்து மருந்துகொடுத்துப் பரிகாரம் செய்கிறாள்; குழந்தை பாலுண்டு வளர்ந்துவருங் காலத்தில் அதற்கு ஏதாவது நோய்வந்தால் அதற்காகத் தான் பத்தியமிருந்து பரிவுடனே பாதுகாக்கிறாள். குழந்தைகொஞ்சம் பெரிதான பிறகு அதற்குப் பேசப் பயிற்றுகிறாள். பலவகையான நல்லொழுக்கங்களையும் நடத்திக் காட்டுகிறாள். தன் மகன் எத்தனை குற்றம் செய்தாலும் அது தாய் மனதுக்கு ஒரு தப்பிதமாகத் தோற்றாது. மகனுக்கு ஏதாவது ஒரு துன்பம் நேரிட்டால் அது தனக்கு நேரிட்டதைப் பார்க்கிலும் பதின் மடங்கு பெரிதாகநினைத்துப் பரிதாபப்படுகிறாள். மகனுக்குக்காலில் முள்தைத்தால் அது தாய்க்குக்கண்ணில் தைத்ததுபோலிருக்கும். பிள்ளை கொஞ்சம் புத்திசாலியாகப்படித்துத்தேறினால், அதைப்பார்த்து மிக்க மகிழ்ச்சி கொள்பவர் மாதாவைப்போல் மற்றெவருமில்லை. தாய் நமக்குச்செய்யும் உதவிகளுக்குப் பிரதி நாம் எத்தனைநாள்

அவளுக்கு ஊழியம்செய்தாலும் நமதுகடன் தீராது. ஆயினும் அவள் நம்மிடத்தினின்றும் மற்றொருநன்மையும் எதிர்பாராமல் நமதுக்ஷேமமொன்றையே பெரிதாகநினைத்துப் போஷிக்கிறாள். ஐயோபாவம்! அருமையிலும் அருமையான இப்படிப்பட்ட நற்றாயைச் சிலர் இளமையிலேயே பறிகொடுத்துவிடுகிறார்களே; அவர்களுடைய துர்பாக்கியத்தை என்னென்று சொல்லலாம் எத்தனை பேரிருந்து அணைத்து ஆதரித்தாலும் ஐயோ! தாயில்லாப் பிள்ளையென்றே பார்ப்பவர்க ளெல்லாரும் பரிதபிக்கிறார்களல்லவா? பிள்ளைகளுக்குச் சந்தோஷமுண்டானாலும் தாயுடன் சொல்லவேண்டும்; சங்கடம் வந்தாலும் தாயுடன் சொல்லவேண்டும். தமது சுகதுக்கங்களை வேறு யாரிடம் சொன்னாலும் தாயுடன் சொல்வதுபோல அவ்வளவு திருப்திகரமாயிராது. அத்தனை அன்புடையவளாக மடிமேலெடுத்து மார்போடணைத்துத் தனப்பால்கொத்து மகிழ்வொடுவளர்த்த மாதாவை மூடர்கள் சிலர்மதிகெட்டுத் தள்ளாதகாலத்தில் ஆதரியாமல் அல்லாடவிடுகிறார்கள். அவர்களிலும் கொடியவர்களான சிலர், ஐயோ! வாயினால்வைது, கையினாலும் அடித்து அவமதிக்கிறார்கள். அவர்களுக்கு என்ன கதிகிடைக்குமோ யாமறியோம். அத்தன்மையான நன்றியற்ற நீசர்களைக் கண்ணால் காணவுங்கூடாது; மனத்தினால் நினைக்கவுங் கூடாது,

நம்மைப் பெற்றெடுத்த தாயைத்தெய்வமாகநினைத்து "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பதையுணர்ந்து மாதாவின் சொற்படிக்கேட்டு நடந்து தள்ளாதகாலத்தில் அவளுக்குப்பலவிதமான உபசாரங்களும் செய்து அவள்மனதுக்கு உவப்பாக நடந்துகொள்ளுகிறவர்களே உத்தமகுமாரர்களாம். தாய்மனங்கோண நடக்கிறவர்கள் கடையரிலும் கடையரான கிராதகர்களாம்.

தாய்செய்நன்றிக்குப்பிற்பட்டது தந்தைசெய்நன்றியாம். நம்மிடத்தினின்றும் பிரதியுபகாரம் ஒன்றையும் எதிர்பாராமல் நமது நன்மையையே கருதி நம்மைப்பரிபாலிப்பவர்களில் தாய்க்குப்பிற்பட்டவர் தந்தையாம். தாய் நம்மைப் பரிவுடன் போஷித்து வளர்க்கிறாளாயினும் தந்தையினது நல்லாதரணை யில்லாவிட்டால் நாம் ஒருபோதும் முன்னுக்கு வரமாட்டோம். நாம் இப்பூமியில் ஜனித்தநாள்முதல் நமக்கு இன்றியமையாதவைகளான உண்டியுடை

முதலிய பற்பல பொருள்களையும் அளித்துச் சகல சவுக்கியங்களையும் தேடிக்கொடுத்து நம்மை ஆதரிப்பவர் தந்தையே; சிறுகுழந்தைப்பருவம் நீங்கிச் சிறிதளவு சுயபுத்தியுண்டானவுடனே நமக்குத் தீயசகவாசம் முதலானவை நேரிடாதபடிக் கவனமாகப் பார்த்து நல்லோருடைய கூட்டத்திலேயே பழகும்படிச்செய்து நமக்கு நற்புத்தி நல்லொழுக்கம் முதலானவைகளைப் பழக்கிவைக்கின்றவர் தந்தையே. எழுத்துப்பார்த்துப் படிக்கும் பிராயம்வந்தவுடனே அக்ஷராப்பியாசம் செய்வித்துப் பள்ளியில் வைத்துக் கல்விகற்பிக்கின்ற குருவும் தந்தையே; அப்போதப்போது நாம் தெரியாமையால் ஏதாவதுதவறுகள் செய்தால் உடனுக்குடனே அவற்றைக் கண்டித்து நம்மை நல்வழிப்படுத்து கின்ற நல்லாசிரியனும் தந்தையே. "இளமையிற் கல்" என்றபடி இளமைப்பருவத்திலேயே நாம் கற்றுத் தேர்ந்தவராகவேண்டுமென்று பாடுபட்டுப் பற்பல ஆசிரியர்களை நியமித்துப்பல கல்விகளையும் கற்பித்துப் பிறகு நல்லதோர் ஜீவனோபாயம் தேடிக்கொடுக்கின்ற போஷகரும் தந்தையே; இவற்றுடன் இடையிடையே அந்தந்தக்காலத்தில் செய்விக்கவேண்டிய பற்பல சடங்குகளும் நமக்குச் செய்வித்து நமது சவுக்கியத்தைத் தேடுகிறவரும் தந்தையே. நமக்கு நன்றாய்ப் புத்திதெரிந்து நாமே நம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்படியான திறமை வருமளவே தந்தை நம்மை நன்றாய்க் காப்பாற்றுகிறாரென்பதில்லை; நமது ஆயுளளவுமாத்திரமேயன்றி புத்திர பவுத்திர பாரம் பரியமாக நாம் எல்லோரும் ஒரு குறைவுமின்றிச் சுகமாக வாழ்ந்திருக்கவேண்டுமென்பதையே முதன்மையாகக் கருதி அதற்குவேண்டிய விசேஷமான பொருள்களையும், காணி பூமிகளையும் தேடிவைக்கின்றனர். விசேஷமான செல்வப் பெருக்கில்லாதவர்கள்கூட அன்றாடம் தாம் உண்ணும் உணவிலாயினும் சிறிதளவு மிச்சம் பிடித்துச் சேர்த்துப் பிள்ளைகளுக்கு ஆஸ்தியென்று வைக்கின்றனர்.

நாம் முன்னுக்குவந்து மேன்மைபெற வேண்டுமென்பதற்காக இவ்வளவு பாடுபடுகின்ற தந்தை நமக்கு ஒருபோதும் தீங்கு நினையாராதலால், அவர் சொல்லும் ஒவ்வொருமொழியும் நமக்கு நன்மை பயப்பதாகவே யிருக்குமென்று நம்பி அதை வேதவாக்கியமாகக்கொண்டு அவர்சொல் தவறாமல் நடப்பது நமது முதன்

மையான கடன். இக்கருத்து நோக்கியே "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்ருள் ஔவையும். தொட்டிலிற் பழக்கம் தேக முள்ளளவும்" என்றபடி ஆதியில் தாய் தந்தையர் பழக்குகின்ற பழக்கமே மக்களுக்குப் பிற்கால வொழுக்கத்திற்கு முதற்காரண மாக இருப்பதால், மக்களுடைய சுகவாழ்க்கைமுற்றும் பெற்ருே ருடைய கைவசத்திலிருக்கிறதென்று சொல்லலாம்; அவர்கள் முத லில் நம்மை எந்தவழியில் திருப்பிவிடுகிருர்களோ அந்த வழிதான் நமக்கு வாழ்நாள் முழுதும். அப்படியிருக்க உபேக்ஷையாக விட்டுவிடாமல் நாம் நல்வழியில் நடந்து விருத்தியாவதே தமக்குப் பெரும் பயனுகக் கருதி,

"தந்தை மகற்காற்று நன்றி யவைய்த்து
முந்தி யிருப்பச் செயல்."

என்று பெரியோர்கூறியபடி, நாம் பேரும்புகழுமாக வாழ்வதற்கு வேண்டியமுயற்சிசெய்து நாட்டில் நம்மை ஒருபொருளாக்கிவிட்ட பெற்ருேர்க்கு நாம் செய்யத்தக்க பிரதிபுபகாரம் என்ன? மற்ருென்றுமில்லை; "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்றும், "தந்தைதாய்ப் பேண்" என்றும் ஔவை கூறியபடி அவர்களே நமக்குத் தெய்வமெனக்கொண்டு பூஜித்துவருவதே நாம் அவர் களுக்குச் செய்யத்தக்க பிரதியுபகாரமாம். அன்றியும் அவர்கள் நமது விஷயத்தில் பட்டபாடுகளெல்லாம் சிறிதும் வீணுகாதபடி அவர்கள் செய்யும் உபதேசங்களை யெல்லாம் உள்ளபடியே கிரகி த்து அவற்றை நமக்கு ஊன்றுகோலாகக்கொண்டு நன் முயற்சி செய்து நூல்கள் அனைத்தையும் நன்குணர்ந்து நல்வழிப்பட்டு இவ னைப் பெற்ருேர்கள் இத்தன்மையான சற்புத்திரனைப் பெறும்படி என்ன தவம் செய்தனரோ என்று சொல்லி உலகத்தா ரனைவருஞ் சந்தோஷிக்கும்படிச் சிறப்புற்றுவாழக் கருதுவதே நாம் அவர்க் குச் செய்யும் பேருதவியாம். இக்கருத்துநோக்கியே,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னேற்ருன் கொல்லென்னுஞ் சொல்."

என்ருர் நாயனுரும்.

இப்படிப் பரம குருவாயிருக்கிற பிதாவை அறிவீனர்களான சிலர் அவர்சொற்படிக்கேளாது அவமதித்து, எல்லாம் தாமேதமது

புத்தியால் விருத்தி யடைந்து பெருமை பெற்றதாக வெண்ணி அகங்காரம்கொண்டு தள்ளாத காலத்தில் அவர்களை அல்லாடவிடு கிறார்கள். அவர்களுக்கு என்ன கதி கிடைக்குமோ நாமறியோம். அத்தன்மை யானவர்கள் அவர்களுக்குப் புத்திரர்க ளல்லவென்றே சொல்லாலம்.

பிள்ளைகள் விருத்தியாவதைப்பற்றி அத்தனையாகப் பாடுபடா மல் உபேக்ஷைசெய்து, அவர்கள் மாதாபிதாக்களிடத்தில் பக்தி பூர் வமாக நடக்கும்போதே உலகத்தார் நம்பும்படியாக வீணான அவ தூறுகளும் பழிகளும் சொல்லித்தங்கள் பிள்ளைகளுக்குள் மித்திர பேதம் செய்து, அவர்களை அல்லாட விடுகிற தாய் தந்தையரும் சிலர் இருக்கின்றனராயினும், அப்படிப்பட்டவர்களை நாம் இங்கே எடுத்து உரைக்கவேண்டியது அவசியமின்று; அத்தன்மையரான யாரோ சிலபேர்களை நோக்கியே "மக்களுக்குச் சத்துரு மாதா பிதாக்கள்" என்ற பழமொழி உலகில் வழங்கலாயிற்று. எப்படி யிருந்தாலும் தாய் தந்தையரைத் தெய்வமென் றெண்ணித் தள் ளாத காலத்தில் அவர்களை அன்புடன் ஆதரித்து அவர்களுடைய சரம கைங்கரியம் தமக்குத்தப்பாமல் கிடைக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு காத்திருந்து 'அவர்கள் தேக வியோக மானவுடனே அவர்களுக்குச் செய்யவேண்டிய பிரேத காரியம்முதலிய சடங்குகளெல்லாம் குறைவில்லாமல் பக்திசிரத் தையுடனே செய்து நிறைவேற்றிப் புத்திரர்கள் தம்கடனைத் தீர்த் துக்கொள்ளவேண்டும் இவ்வுலக வியாபாரங்களை முற்றுந் துற ந்த முனிவர்களும் தாய் கடன் கழிக்கக் காத்திருக்க வேண்டு மென்று இந்து தரும சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அப்ப டியே முற்றுந் துறந்தவரான பட்டிணத்தார் தாயிறக்குமளவும் அவளுக்குச்சரம கைங்கரியம்செய்யக் காத்திருந்தாரெனவும், அவள் மரித்தபின்பு வாழைமரங்களைக் காஷ்டமாயடுக்கி அதன் மேல் அவளைக் கிடத்தி வாய்க்கரிசியிட்டு,

"முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே."

என்று சொல்லிக் கொள்ளிவைத்துக் குடமுடைத்து உத்தரக்கிரியைகளும் நடத்தினரெனவும் பிரசித்தமாக இருக்கிறது அவர் வாய்ச் சொல்லின் வலிமையால் அவர் காஷ்டங்களாக அடுக்கிய அவ்வாழை மரங்களிலேயே தீயண்டி எரிந்ததென்று சொல்லுகிறார்கள். இவ்வாறு மாதா பிதாக்களிடத்தில் பக்தியுடையராயிருப்பவர்களே சற்புத்திரர்களாம். தம் பிள்ளைகள்பேரில் வீண் பழி, அவதூறு முதலானவை சொல்லாதிருப்பவர்களே மாதா பிதாக்களாவார்கள்.

A. S. அண்ணாமலை.

---

4. ஸ்நாநஞ்செய்யும் முறை.

தேகம்சவுக்கியமாக இருந்து திடகாத்திரர்களாக இருந்தால் கோடைகாலத்தில் குளிர்ந்தஜலத்தில் நீராடலாம். குளிர்ந்த நீர் தேகத்தின்மீது பட்டவுடன் ரக்தமானது ரக்தாசயத்தைநோக்கிச் செல்ல, எப்பொழுதும் இருப்பதைவிட விரைவாக அடித்துக் கொள்ளத் தலைப்பட்டு உஷ்ணமான இரத்தத்தைத் தன்னிடமிருந்து சருமத்தை நோக்கித்தள்ளும். இரண்டாவது, தோலில் இரத்தம் தங்கி யிருக்கும்படிப் பல சிறு கருவிகள் உண்டு. உஷ்ணமும் புதிதுமான இரத்தமானது இவ்வாறு தேகத்தில் எங்கும் பரவுவதினால் குளிர்ந்த நீரில் ஸ்நாநம் செய்த பிறகு தேகத்திற்கு நல்ல வலிவையும் சுகத்தையும்தருகிறது. நனைக்கப்பட்ட கடற்காளானிலாவது முரட்டுத் துவாலையினாலாவது உடம்பை நனைத்த பின்பு உலர்ந்த பரும்படியான துனியால் தேகமுழுதும் சிறிதும் ஈரமில்லாமலிருக்கும்படி அழுத்தித் துடைப்பதினாலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்ததுபோலாகும். தண்ணீரில் வெகு நேரமளவுமிருத்தல் மிகவும்தீது. சாப்பிட்டவுடனே ஸ்நாநஞ்செய்யப்போதலும் தீதேயாம். ஏனெனில் சாப்பிட்டான பின்பு உணவை ஜரிப்பிக்கும் கருவிகளெல்லாம் உஷ்ணமான இரத்தத்தின் உதவியால் உணவைப் பக்குவப்படுத்திக்கொண்டிருக்கும். இதனாலே தான் பசித்தவுடன் உடம்பில் சற்றே குளிர் உண்டாகிறது. தேகத்தில் குளிர் உண்டாயிருக்கும்போதும அதிகவேலைசெய்துமிகவும் இளைப்புற்று இருக்கும்போதும்கடலிலாவது வேறுநீரிலாவது ஸ்நாநம்

செய்வதினல் ஆபத்துஉண்டாகும். போஜனம்செய்துஇரண்டுமணிக்குப் பிறகுதான் ஸ்நாநம்செய்யக்கூடும்; அன்றியும் சிறிதுதூரம் நடந்தால் உடம்பில் உஷ்ணம்கொடுத்து இன்னும் சுகமாகயிருக்கும். காலேயில் ஸ்நாநஞ்செய்தல் மிகவும் நன்று. தேகத்தின் சுபாவத்தை அனுசரித்து ஸ்நாநம் செய்யும் காலமானது வெவ்வேருக இருக்கும். சிலருக்கு மூன்றுநிமிஷம் போதும். அவர்கள்நீந்தினல் பத்துநிமிஷமட்டும் தண்ணீரிலிருக்கலாம். தண்ணீரைவிட்டு எழுந்திருக்கையில் தேகத்தில் உஷ்ணம் மட்டும் படாமல் சுகமாகயிருந்தால்ஸ்நாநம்செய்ததினலே;சிறிதும் தீங்கில்லேயென்பதையறிந்துகொள்ளலாம். குளிர்ந்த நீரில் ஸ்நாநம்செய்தபிறகு தேகம் குளிர்ந்து கூசிநடுங்குபவர்கள் வெந்நீரில் ஸ்நாநம்செய்வதேநன்று. சிறுகுழந்தைகளேக் கட்டாயப்படுத்தித் தண்ணீரில் அமிழ்த்தி அவர்கள் நடுங்கும்படி நீராட்டுவது அநேகருக்கு இயல்பு. இவ்விதம் செய்வதுகூடாது.

வி-ம்.

---

5. மந்திரவித்தை.

நம்மவர்கள் மந்திரம் என்ருல் நம்புவதே கிடையாது. அதனேப்பெரும்பாலுமுறையாக அனுட்டித்துக் கீர்த்திபெறுவார் நம்மவருட்சிலரேயுளர். பெரும்பாலார் மந்திரம் என்பது பொய்யென்றுகூறி அதனேமுற்றும் ஒழிக்கின்றனர். இக்காலத்து, ஆங்கிலேயர் முதலானேர் இவ்வித்தையைப் பெரிதும் அனுட்டித்து, அதனல் பெருங்கீர்த்தியை அடைந்து வருகின்றனர். அவர்கள் அம்மந்திரவித்தையின் உதவியைக்கொண்டு, செய்யும் வேலேகள் அபரிமிதமாகவுள்ளன. யார்யாரை வசப்படுத்தவேண்டும் என்று எண்ணுகிருர்களோ அவரவரை அவர்கள் அவ்வித்தையின் உதவியால் வசப்படுத்துகின்றனர். எத்தகையதுஷ்டரையும் நல்வழிப்படுத்துகின்றனர். பிறர்மனதில் உள்ள எண்ணங்களே எளிதில் வெளிப்படுத்துகின்றனர். அனேகாயிரமைல் தூரத்தில் உள்ள நகரத்தில் இருக்கும் ஒருவன் பேசும் விஷயத்தை மந்திரவித்தையின் பலத்தால் இருந்த இடத்தில் இருந்தேசொல்லுகின்றனர். எத்த

கையவியாதிகளையும் கணப்பொழுதில் ஒழித்து விடுகின்றனர். இத்தகைய அரியவிஷயங்களைச் செய்தற் கேதுவாய மந்திரவித்தை அடங்கியநூல்கட்கு அவர்கள், ஹிப்னாடிசம் என்றும், மெஸ்மரிசம் என்றும், டெலிபதி என்றும், பர்சனல் மாக்னடிசம் என்றும் பெயர் வைத்திருக்கின்றனர். அந்நூற்களைப்படித்து, அவற்றிற் சொல்லியபடிச்சிறிது சிரமம் எடுத்துப் பழகிவரின், மேற்கூறிய அரியசித்திகள் எல்லாம் உள்ளங்கனிநெல்லிக்கனிபோலாம். யான் அந்நூற்களில் உள்ளவிஷயங்களைப் படித்துச்சாரமாக உள்ளவற்றை எல்லாம் ஒருதிரட்டாக எழுதிவைத்துளேன். அத்திரட்டினை மந்திரவித்தை என்னும் பெயருடன் புத்தகரூபமாக அடுத்த பத்திரிகையில் இருந்து வெளியிடப்போகிறேன். அதனை நம்மவர் பலரும் படித்து, அதிற்கூறியபடிப் பழகிவருவராயின், நோயற்ற வாழ்வு, வியாபாரமேன்மை, ஞாபகசக்தி, முதலிய அரியசித்திகளை அடைவரென்பதற்கு ஐயமே இல்லை. இப்போது எழுதியவையெல்லாம் பொய் என்றுஎண்ணும் புண்ணியசீலர்கள் அந்நூலைப் படியாமல் இருப்பதே உத்தமமாகும். யார் அந்நூலிடத்தில் மிக்க சிரத்தைவைத்து, அதுசொல்லியது போலப் பழகுகிறார்களோ, அவர்களே மேற்கூறிய எல்லாசித்திகளையும் பெறுவர். வருகிற மாதத்தில் இருந்து எழுதப்போகும் மந்திரவித்தை என்னும் நூல், ஆங்கிலேயர் அனுட்டித்து வரும் ஹிப்னாடிசம் என்னும் நூலை அனுசரித்ததாகும். அதுமுடிந்ததும் தூரசிரவணம், மனோவசிய மஞ்சரி என்கிறநூல்களும் முறையே டெலிபதி, மெஸ்மரிசம் என்னும் நூல்களின் சம்பந்தமாகவே எழுதப்படும். இதுகாறும் பொய் என்று எண்ணி இருந்த குருட்டபிப்பிராயத்தை அறவே ஒழித்து, அறிவாளிகளாகிய நம்மவர், இவ்வித்தையினைக்கற்று மேன்மையுறுவாராக.

அவளே எனதுயிர்.

முதற்களம்.

களம்:	காவிரிப்பூம் பட்டிணத்துக் காவிரி யாற்றங் கரையில் அரசர் தங்கிடம்.
காலம்:	பிற்பகல்.
பாத்திரங்கள்:	கிள்ளிவளவன், மாவளத்தன், குடிகள்.

[காவிரிப்பெருக்கின் நிமித்தம், குடிகள் விழா எடுக்கின்றனர்.]

கிள்ளிவளவன்—நண்ப! இப்பெருங்கூட்டத்தை, இன்று நான் கண்டதுபோல என்றும் கண்டதே இல்லை! என்ன கூட்டம்! என்ன இரைச்சல்! அப்பா! தலைவெடித்துப்போவதுபோல அன்றோ இருக்கிறது!

மாவளத்தன்—இதைக் கண்டே, நீ இப்படிச் சொற்றனையே, இன்னும் காலையே பார்த்தால் என்ன சொல்லுவையோ!

கிள்ளிவளவன்—காலை இதைவிடக் கூட்டம் அதிகமா!

மாவளத்தன்—ஆ ஹா! சொல்லவும் வேண்டுமா! அசாத்திய மான கூட்டம் ஆயிற்றே.

கிள்ளிவளவன்—அப்படியா! (சற்று நிதானித்து) அதோ யாரோ சிலர் பாடிக்கொண்டு வருகின்றனர்! என்னபாடல் அது! அதைச்சற்றுச் செவிசாய்ப்போம்.

குடிகள் —

விருத்தம்.

திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவேரி
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன்வாழி காவேரி.

[கையிற் கலசம்கொண்டு பாடிச் செல்கின்றனர்.]

கிள்ளிவளவன்—மாவளத்த! கேட்டனையா இப்பாடலை! இது சிலப்பதிகாரத்துள்ளதோர் பாடல் அன்றோ?

மாவளத்தன்—ஆம் ஆம். இது ஆற்றுவரியில் உள்ளதோர் பாடல்.

கிள்ளிவளவன்—என்ன நயம்! சமயத்துக்கு ஏற்ற பாட்டையே இவர்கள் பாடிச் செல்கின்றனர்.

மாவளத்தன்—இவர்கள் எல்லோரும், இன்று ஆனந்தப்பெருக்கிலேயே அமிழ்ந்துவிட்டவர்போல அன்றோ காணப்படுகின்றனர்.

கிள்ளிவளவன்—இருக்கவேண்டியதுதானே? ஆனந்தத்தை விளைவிக்கும் ஆற்றின் பெருக்கை, அவர்கள் காணுந்தோறும் ஆனந்தப்பெருக்கில் ஆழ்கின்றனர்.

மாவளத்தன்—இந்த ஆற்றின் வேகத்தைக் கண்டனையா? என்ன வேகமாகச் செல்கிறது!

கிள்ளிவளவன்—இதுபற்றியே இதனைப் புலவர்கள் தங்கள் வாக்குக் குவமையாக எடுத்துக் கூறியுள்ளார்கள் போலும். ஆம், கற்றுவல்ல புலவர்கள், பாட ஆரம்பித்தால், மிகவும் விரைவாகத் தடையின்றிப் பாடுகின்றனர் அன்றோ?

மாவளத்தன்—கற்றுவல்ல புலவர் எல்லாம், கவி கமனம் செய்ய வல்லுநரா என்ன? அவருள்ளும் சிலரே பாடவல்லவராவர். மேலும், இக்காவிரிப்பெருக்கை உவமித்தது, கல்விப்புலமையோடு, வரப்பிரசாதமும் அமையப்பெற்றாரது வாக்குக்கன்றோ?

கிள்ளிவளவன்—சந்தேகம் என்ன? நீ சொல்லுவது உண்மையே.

மாவளத்தன்—அதோ மற்றும் ஓர் கூட்டம், பாட்டில் நாட்டம் வைத்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் பெண்களாகவே இருக்கின்றனர்.

கிள்ளிவளவன்—(அவ்வழியை நோக்கி) ஆமாம். அவர்கள் கையில் இருப்பதென்ன? சுவல் முதலியவற்றைத்தாங்கி வருகின்றனரே!

மாவளத்தன்—சுவல்மாத்திரம் அன்று. அதனில், காதோலை, கரிமணி, மஞ்சள், குங்கும முதலியவற்றை வைத்து, ஏந்தி வருவர்.

கிள்ளிவளவன்—அவை எல்லாம் எதற்கு?

மாவளத்தன்—இப்படித்தான் அவர்கள் விழாக்கொண்டாடுவது. அவர்கள், காவிரியை ஓர் நங்கையெனக்கொண்டு, அவளுக்கு அம்மங்களத் திரவியங்களைச் சமர்ப்பிப்பது மரபு.

கிள்ளிவளவன்—அவர்கள் ஏதோ பாடிக்கொண்டும் வருகின்றனரே.

மாவளத்தன்:—ஆம், அவர்களும் ஏதோ பாடிக்கொண்டு வருகின்றனர்.

குடிகள் —

விருத்தம்.

உழவரோதைமதகோதை யுடைநீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்பநடந்தாய் வாழிகாவேரி
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்ததெல்லாம்வாய்காவா
மழவரோதை வளவன்றன்வளனே வாழிகாவேரி.

[பாடிச் செல்லுகின்றனர்.]

கிள்ளிவளவன்—அடடடா! இவர்கள் இதற்காகவே இந்தஆற்றுவரியை மனப்பாடம் பண்ணிக்கொண்டனர் போல இருக்கிறதே!

மாவளத்தன்—நண்ப! வளவன்றன் வளனே என்று கூறிய வனப்பைக் கண்டனையா? என்ன இனிமை!

கிள்ளிவளவன்—அவர்கள் அறிவை வியத்தற்கும் நமக்குத் திறம் உண்டா! ஆமாம், வளவன்வளன் அன்றோ இக்காவேரி! உண்மையே. இந்நதியிலதாயின் பயிர் ஏது! பயிர் இலதாயின் குடி ஏது! குடியிலதாயின் வளவன் ஏது! எவ்வளவு பொருட்செறிவுடன் கூடி இருக்கிறது பார்! இப்படி ஆராய்ச்சியிலேயே பொழுதுபோக்காக இருப்பதன்றோ இன்பம். செய், ஏனைய இன்பங்கள் இன்பங்கள் என்று சொல்லவும் படுமா? (சிறிது யோசித்து) நண்ப! யான் ஒன்று சொல்லுகிறேன்; அதைக்கேள். அது விஷயம் உனக்கும் திருப்தியாக இருக்கும் எனவே எண்ணுகிறேன்.

மாவளத்தன்—நீ சொல்வதில் எனக்குத் திருப்தியைத் தராததும் ஒன்றுண்டோ! ஏன் பீடிகையிட்டுப் பேசுகிறாய்? உன் மனத்துள்ளதை வெளியிடு.

கிள்ளிவளவன்—ஆனால், சொல்லுகிறேன் கேள். நாமோ நம்முடைய ஆசிரியரிடத்தில், பல நூற்களைக் கற்றுள்ளோம்.

மாவளத்தன்—உண்மையே அப்புறம்—

கிள்ளிவளவன்—அவரும் தமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் ஒளிக்காமல், நமக்குப் போதித்துள்ளார்.

மாவளத்தன்—யாதொரு வஞ்சகமும் இன்றித் தமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் சொல்லியுள்ளார்; உண்மையே.

கிள்ளிவளவன்—அப்படி இருந்தும் என் மனம், அதோடு திருப்தியடையவில்லை. மேலும் படிக்கவேண்டும் என்ற பிரியமே இருக்கிறது.

மாவளத்தன்—ஆ ஹா! படிப்பதற்கென்ன? படிக்கலாம். படிப்பதைவிட நமக்கிப்போது என்ன வேலை?

கிள்ளிவளவன்—அஃதொன்றும் இல்லை. யாரிடத்தில் படிப்பது? நமக்குப் பாடம் சொல்லும் திறமைவாய்ந்தவர், யார் இச்சோணாட்டின்கண் உள்ளார்? ஒருவரும் இல்லையே.

மாவளத்தன்—சோணாட்டில் ஒருவரும் கிடையாது; அது உண்மையே.

கிள்ளிவளவன்—ஒருவரும் இல்லாததால், நம்முடைய படிப்பை நிறுத்திவிடலாமா ?

மாவளத்தன்—அஃதெப்படி ? இதற்காகப் படிப்பை நிறுத்தக் கூடாது.

கிள்ளிவளவன்—நல்லது; படிக்கவேண்டியது ஆவசியகம் என்பதை ஒப்புக்கொண்டாய் அல்லவா ?

மாவளத்தன்—அதற்கென்ன, கேட்கவும்வேண்டுமா ? நாம் படித்தது எவ்வளவு ? 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாததுலகளவு' என்று கலைமடந்தையே ஓதுகின்றாள் என்றால், நாம் படித்தவரிற் சேர்ந்தோராவது எப்படி ?

கிள்ளிவளவன்—சரி - அதற்காக யான் ஒரு வழிசொல்லுகிறேன் கேள். அதாவது, நாம் இருவரும் வேற்றுருக்கொண்டு, மதுரைசென்று, புலவர்பெருமானான நக்கீரரிடம் கல்வி கற்கவேண்டும் என்பதே. என், உன் எண்ணம் என்ன?

மாவளத்தன்—என்ன ! இதற்காகவா நாம் வேற்றுருக்கொள்ள வேண்டும் ! மதுரைக்குப் போகவேண்டும் ! இது விஷயம் எனக்கு நன்றாக இல்லை.

கிள்ளிவளவன்—அப்படியா ? நீ எப்போது இதற்காகவா என்று இழிவுறச் சொன்னாயோ, அப்போதே உனக்குக் கல்வியிற் பற்றில்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். இதற்காகவா என்றாயே, இதைவிடப் பெரிய காரியமும் உலகில் வேறுண்டா ?

மாவளத்தன்—நண்ப ! நீ என் கருத்தறியாது தப்பபிப்பிராயங் கொண்டாய். என்கருத்து அஃதல்ல. எனக்குக்கல்வியிற் பற்றில்லை என்பதை, இதனாற் சொல்லிவிட்டதைப்பற்றி யான் விசனிக்கிறேன். உன் பொருட்டே யான் இதனைச் சொன்னேனே அல்லது வேறு அல்ல. எனக்கு இது விஷயத்தில் எவ்வளவோ பிரியம்.

கிள்ளிவளவன்—ஓ ஹோ ! உனக்கொருவிதம், எனக்கொருவிதமா ! நன்றாக இருக்கிறது ! இதனாலேயே நீ சுயநலம் உடையன் என்பது தெரியவில்லையா ?

மாவளத்தன்—அப்படி ஒருபோதும் எண்ணவேண்டாம். உனது நிலையை எண்ணிச் சொல்லினேன்.

கிள்ளிவளவன்—எனது நிலை என்ன ?

மாவளத்தன்—உனது நிலை என்ன என்று என்னை கேட்கிறாயே; நீ அறியாயா ? நீயோ அரசகுமாரன். முதலாவது, அரசகுமாரனாகிய நீ, ஏன் வேற்றூருக்கொண்டு செல்லவேண்டும் என்பது. இரண்டாவது, நின் தந்தையோ வயோதிகர். அவர் உனக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்துக் கண்ணால் பார்க்கவேண்டும் என்று, அடிக்கடிச் சொல்லிக்கொடிருக்கிறார். அதுவே அன்றி, இப்போது உங்களுக்கும் பாண்டியனுக்கும் எலிக்கும் பூனைக்கும் உள்ள சம்பந்தம் உண்டு. இவற்றையெல்லாம் எண்ணியே யான் வேண்டாம் எனத் தடுத்துரைத்தேன்.

கிள்ளிவளவன் —இதற்காக நம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுகிறதா! எப்படி இருந்தாலும் என்ன ?

மாவளத்தன்—நீ கல்விகற்க வேண்டின், மதுரைக்குப் போகாமலே முடியாதா ?

கிள்ளிவளவன்—அஃதெப்படி முடியும். ? அது ஒருபோதும் முடியாத காரியம். மதுரைக்குப் போகாமல் படித்தலாகும் என்பது, கண்ணில்லாமல் காணலாகும் என்பதுபோல அன்றோ இருக்கிறது. இந்தச் சிறுதடைகளை எண்ணியா நாம் நம்முடைய முயற்சியைக் கைவிடுவது !

மாவளத்தன்—முயற்சியை விடச்சொல்லவில்லையே யான். நீ இவ்விடத்திலேயே படித்துக்கொள்ள முடியும். எப்படி என்றால், உனது தந்தையாரைப் பாடிப்பரிசுபெற எத்தனையோ புலவர்கள் வருகின்றனர். அவர்களுள் ஒருவரிடம் படித்துக்கொள்ளலாம் அன்றோ.

கிள்ளிவளவன்:—அது நல்லதல்ல. வந்தவரைவந்த இடத்திற்றங்கி, எனக்குப் பாடஞ்சொல்லிப் போங்கள் எனக் கேட்டல் நியாயமாமா?இது பாடங்கேட்டலின் முறைமைதானாகுமா?

மாவளத்தன்—முறைமையன்றுதான் - மதுரைக்குப் போவது மாத்திரம் முடியுங் காரியமா?

கிள்ளிவளவன்—முடியும் காரியமே. அது நம்முடைய பிரயத்தனத்தால் ஆகக்கூடியதே.

மாவளத்தன்—உன்தகப்பனர், அது விஷயத்தில் சம்மதிக்கமாட்டார் என எனக்கு நன்ருய்த் தெரியும். என்னமோ, இதைத்தான் நான் ஏன் சொல்லவேண்டும். நான் வரத் தடையில்லை. உன் இஷ்டம்போலவே நான் வருகிறேன். பிறகு நிந்தையை என்மேல் சுமத்தாதபடிச்செய்துகொள்.

கிள்ளிவளவன்—அஃதென்ன நிந்தை? உன்மேல் நிந்தைகூறப் புகுவார் யார்?

மாவளத்தன்—இல்லை, நீ நின் தந்தையின் உத்தரவுபெருமல்—

கிள்ளிவளவன்—உத்தரவு பெருமல் வந்தாற்ருனே?

மாவளத்தன்—மற்றைப்படி என்ன!

கிள்ளிவளவன்—யான் என் தந்தையின் அனுமதிபெற்றுக்கொண்டால், நீ வரத்தடையில்லையே?

மாவளத்தன்—தடையே கிடையாது. சந்தோஷமாகப் போய்வரலாம்.

கிள்ளிவளவன்—நல்லது, நான் என் தந்தையினிடம் நாளையே உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன். நாமும் நாளையே பிரயாணப்படவேண்டும்?

மாவளத்தன்—இவ்வளவு சீக்கிரத்திலா பிரயாணம்?

கிள்ளிவளவன்—ஆமாம். தாமதிக்கப்படாது; நாளையே அவசியம் புறப்படவேண்டும்.

மாவளத்தன்—நண்ப! நீ கல்வியில் வைத்திருக்கும் மிகுந்த பிரியத்தை இன்றேநான் கண்டேன். உன்தந்தையும் உனக்கு

ஒரு தடையும் சொல்லாது உத்தரவுகொடுக்க, யான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

கிள்ளிவளவன்—மாவளத்த! நாளை நீவரத் தடையில்லை. சரி, நம்முடைய எண்ணம் முட்டின்றி முடிய முழுமுதற் கடவுளைத் துதித்துச் செல்லுவோம்.

விருத்தம்.

பாயிரமா மறையனந்த மின்னும்
பார்த்தளந்து காண்டுமெனப் பல்கால்மேவி
ஆயிரமா யிரமுகங்களாலும் பன்னு
ளளந்தளந்தோ ரணுத்துணையு மளவுகாணு
தேபிரங்கி யழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பவருட் பரவெளிவாழ் சிவமேயீன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல்வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றும் தாங்குந்தேவே.

[இருவரும் பாடிச் செல்லுகின்றனர்.]